## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 7531 / 2013 / எம்சி. 8 நாள் : 24 .08.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **29.08.2013** வியாழக்கிழமை பிற்பகல் **3.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஆகஸ்ட் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2011-ன் படி 40 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு விற்பனை மற்றும் உபயோகபடுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது –தண்டனை விதித்தல் - தொடர்பாக |
| **2** | பொது சுகாதாரம் - துப்புரவாளர்களின் குடும்பத்தாருக்கு தாட்கோ மூலம் நிதியுதவி வழங்கும் திட்டம் - மாநகராட்சி ஆணையர் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மாவட்ட மேலாளருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **3** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – 160 பயனாளிகள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **4** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – 50 பயனாளிகள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **5** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஆயுர்வேத எலும்பு மற்றும் மூட்டுவலி சிகிச்சை மருத்துவமனை தொடங்குதல் - செலவினங்கள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **6** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி தலைமை அலுவலகத்தில் மூலிகை உணவகம் திறப்பது - செலவினங்கள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக. |
| **7** | பொறியியல்பிரிவு -ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டம்(IUDM) - திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சிப்பப் பணிகள்- சிப்பம் 1 –ன் பணியான முதற்கட்ட குப்பை சேகரிப்புப் பணிக்காக 13 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **8** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்குட்பட்ட குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **9** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 71 காமராஜர் சாலையில் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் கட்டுதல் மற்றும் வார்டு எண் 9 அம்பேத்கார் நகரில் பொதுக்கழிப்பிடம் திரும்பக் கட்டுதல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் குழாய் பொருத்துநர் உரிமம் வழங்குதல் - கடன்தீர்வை சான்று சமர்பிப்பதற்காக மாற்றாக ரூ. 1 இலட்சம் தொகை செலுத்த அனுமதித்தல் மற்றும் வயது வரம்பு தளர்வு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **11** | குடிநீர் விநியோகம் - குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல்– திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் வைப்புத் தொகை மற்றும் மேற்படி கட்டணவிகிதங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளை 01.10.2013 முதல் நடைமுறைப்படுத்த மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய (Gazette Notification) மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **12** | Jnnurm - கோவை மாநகராட்சிக்கு தனியாக 125 எம்.எல்.டி. கொள்ளளவு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் பொருட்டு, சுத்திகரிக்கப்பட்ட நீர் வரும் வகையில் தனியாக கட்டன் மலையில் மலைப்பாதை அமைத்து தண்ணீர் கொண்டு வருதல் – மதிப்பீடு ரூ. 12.49 கோடியை அரசு முழு மானியமாக பெற்று (அடிப்படை வசதி இடைவெளி நிரப்பும் நிதி அல்லது இதர மானிய நிதி) அல்லது மாநில அரசு மானியம் மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் அல்லது மாநகராட்சி பொது நிதி மூலம் செயல்படுத்துதல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **13** | கணக்குப் பிரிவு - தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுதற்காக ரூ.3556 இலட்சம் கடனுதவி அளித்தல் - நிபந்தனைகளை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | கணக்குப் பிரிவு - தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் IIIன்கீழ் மானிய நிதி 1-ன்படி ரூ.1016 இலசட்சம் அளித்தல் - நிபந்தனைகளை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64- சிங்காநல்லூர் பேருந்துநிலையத்தை தி/ள். சாந்தி சோசியல் சா்வீஸஸ், கோயம்புத்தூா் என்ற தனியாா் தொண்டாா்வு அறக்கட்டளை நிறுவனம் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்ய அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **16** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 28க்கு உட்பட்ட சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு வாடகை நிா்ணயம் செய்து பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **17** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 55க்கு உட்பட்ட செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகம் மற்றும் வசூல் மையம் செயல்பட ஒதுக்கீடு செய்தல் - வாடகை நிா்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **18** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 – செங்காடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது மறுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயா்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் - மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தது (நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில் )- மாமன்றத்தில் ஒப்பதல் அளிக்கப்பட்டு உயா்வு செய்யப்பட்ட கடைகளின் வாடகையினை வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது குறைக்கப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **20** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயா்வு செய்தல் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயா்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக |
| **21** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54- காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் மைய அறையை மாதாந்திர வாடகை கடையாக மாற்றி வாடகை நிா்ணயம் செய்து பொது ஏலத்தில் சோ்ப்பது – தொடர்பாக. |
| **22** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 - சீனிவாசபுரம் காய் கறி மாா்க்கெட்டில் காய்கடை எண்.28- ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - உயா்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **23** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.82 – பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் ATM - புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் மற்றும் இந்தியன் வங்கியின் கிளை அலுவலகம் ஆகியவைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிா்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **24** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.8-கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கடைகள் - டெபாசிட் தொகை மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் மூலம் வாடகை தொகையை அரசு மதிப்பீட்டின்படி நிா்ணயம் செய்து பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| **25** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2013-16ம் ஆண்டுக்கான கத்தகை இனங்கள் - பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் கடைகள் மற்றும் மாநகராட்சி கலையரங்கம் அருகில் முதல் தளத்தில் உள்ள கட்டிடம் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **26** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.23 & 24- திருவேங்கடசாமி சாலை, சர்சண்முகா சாலை- இராமசந்திராசாலை சந்திப்பு மற்றும் ஆரோக்கியசாமி ரோடு வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகள் - டெபாசிட் தொகை மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் மூலம் வாடகை தொகையை அரசு மதிப்பீட்டின்படி நிர்ணயம் செய்து பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| **27** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - சுண்டக்காமுத்தூர் சுங்க வசூல் - வருடாந்திர குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **28** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 77ல் சொக்கம் புதுார் ரோட்டில் அமைந்துள்ள சலவைத்துறையில் சலவை தொழில் செய்ய கடை எண் 7720366(Reg)க்கு வெளிமார்க்கெட் அடிப்படையில் நிர்ணயம் செய்ததை குறைக்க கோரியது– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **29** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 16 – வடவள்ளி பகுதியில் புதிய பேருந்து திருப்பு முனையம் அமைத்தல் - விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **30** | பொது சுகாதாரம் - மாநகராட்சிப் பகுதிகளில் - பிளாஸ்டிக் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு, சூரியஒளி மூலம் மின் சக்தி உற்பத்தி செய்ய கட்டமைப்பை ஏற்படுத்துவது மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் போன்றவைகளுக்கு பொது மக்களுக்கு ஊக்கத் தொகை, வழங்குவதற்கான செயல்முறை திட்டத்தை அமல்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **31** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கோழிக்கடைகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகளை தி.ள். வி.கே.எஸ். பார்ம்ஸ் பிரைவேட் லிட், திண்டுக்கல் நிறுவனத்தினருக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **32** | பொது சுகாதாரம் - மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் பன்றிகளை பிடித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **33** | தெற்கு மண்டலம் - குறிச்சி குளத்தின் கரையில் நடைபாதை மற்றும் பூங்காக்கள் ஏற்படுத்துதல் - பொதுப்பணித்துறையுன் தடையின்மை சான்று கோருல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **34** | பொறியியல் பிரிவு -தமிழ்நாடு நகர்புர சாலை உள்கட்டமைப்பு நிதிப்பணிகள் - சாலைப் பணிகள் - 18 சிப்பங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **35** | Jnnurm – TUFIDCO மூலம் திட்ட பணிகளுக்காக ஒதுக்கீடு வழங்கப்பட்ட மாநில அரசு வட்டியில்லாத கடன் தொகை 20% - முழு மானியமாக வழங்க அரசுக்கும் TUFIDCO நிறுவனத்திற்கும் கருத்துரு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **36** | Jnnurm பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது – ஆய்வுக் கட்டணம் செலுத்துதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **37** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 38 – வ.உ.சி. நகர் சாலை முதல் ரயில்வே பாலம் வரை தார்சாலை அகலப்படுத்துதல் - ரயில்வே தரைப்பாலத்தின்கீழ் கான்கிரீட் தளம் மற்றும் தடுப்புச்சுவர் கட்டுதல் - செங்காளியப்பன் நகர் சாலைகளை அகலப்படுத்துதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **38** | பொறியியல் பிரிவு - பழைய மாநகராட்சி பகுதி 60 வார்களில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு செய்தல் - ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளது – மேற்படி பூங்காக்களுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

**(குறள் - 596)**

**விளக்கம்**

எண்ணுவதெல்லாம் உயர்ந்த சிறந்த குறிக்கோள்களை நோக்கிய எண்ணங்களாக இருக்கட்டும். நோக்கங்கள் கைகூடுவதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் ஊக்கத்தில் தளராமை மேன்மை தரும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ)** **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2011-ன் படி 40 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு விற்பனை மற்றும் உபயோகபடுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது – தண்டனை விதித்தல் - தொடர்பாக.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களாலும், வியாபாரிகளாலும் வெகுவாக பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரி பேக், பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டி கப்புகள், டம்ளர்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் தெருக்களில் எறியப்படுகின்றன. அவ்வாறு கழிவு செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் பாதாள சாக்கடை மற்றும் கழிவு நீர் சாக்கடைகளில் அடைப்பு ஏற்படுத்தி சுற்றுப்புறசூழல் மாசுபடவும், பிளாஸ்டிக் பொருள்களை உட்கொள்ளும் கால்நடைகள் இறந்துவிடவும் காரணமாக இருக்கிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2011-ன் படி 40 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, இருப்பு மற்றும் விற்பனை செய்யும் கடை மற்றும் நிறுவனம் ஆகியவற்றின் மீதும் மற்றும் உபயோகிப்பாளர்கள் மீதும் மிக கடுமையான நடவடிக்கை எடுக்கலாம்.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம்

ந.க.எண்.13664 /2006 /எம்.இ.8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 148 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - துப்புரவாளர்களின் குடும்பத்தாருக்கு (THADCO) தாட்கோ மூலம் நிதியுதவி வழங்கும் திட்டம் - தொடர்பாக

பார்வை :- அரசாணை நிலை எண். 77. ந.நி & கு.நீ.வ.துறை நாள். 30.05.2013

******

மாநகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் அவர்களது கல்விக்காகவும், சுய தொழில்கள் தொடங்கி நடத்துவதற்குமான நிதியுதவிகளை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலமாக தேசீய துப்புரவாளர் நிதியுதவி மற்றும் மேம்பாட்டுக் கழகம் செய்வதற்கு முன்வந்துள்ளது.

இது தொடர்பாக நிதியுதவி வழங்கி திரும்ப வசூலிக்கும் நடைமுறைகளை சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மூலமாக மேற்கொள்ள அரசாணை நிலை எண்.77 ந.நி.&.கு.நீ.வ.துறை நாள். 30.05.2013-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மாவட்ட மேலாளருடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, துப்புரவாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தாரின் பொருளாதார மேம்பாடு கருதி மேற்சொல்லப்பட்ட நிதியுதவித் திட்டத்தை கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதன்படி செய்துகொள்ளப்பட வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்திக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 6516/2013/ எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 149 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 164 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தகுதியுடையவர்கள் | 160 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | 02 |
| பெயர் இரு முறை பதிவு (Double Entry) | 02 |
| மொத்தம் | 164 |

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில், மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய **160** பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 772/2013/எம்.இ.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 150 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 51 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தகுதியுடையவர்கள் | 50 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | 01 |
| மொத்தம் | 51 |

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில், மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய **50** பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். **3685 /2012/**எம்.இ.**6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 151 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆயுர்வேத எலும்பு மற்றும் மூட்டுவலி சிகிச்சை மருத்துவமனை தொடங்குதல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியானது 72 வார்டுகளிலிருந்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது 100 வார்டுகளுடன் சுமார் 16 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.

பொதுவாக 40 வயதினைத் தாண்டியவர்களில் சுமார் 50 சதவீதம் மக்கள் எலும்பு மற்றும் மூட்டு வலி நோயினால் அவதிக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு சிகிச்சை அளிக்க கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஆயுர்வேத முறைப்படி எலும்பு மற்றும் மூட்டுவலி மருத்துவமனை தொடங்கப்பட உள்ளது.

இதுபோன்ற ஆயுர்வேத எலும்பு மற்றும் மூட்டுவலி சிகிச்சை மருத்துவமனை தமிழகத்தில் எந்த ஒரு மாநகராட்சியிலும் இல்லை. இந்த ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை முறையினால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படாமலும், எலும்பு தேய்மானம் மற்றும் மூட்டு வலிகள் வருவதைத் தடுக்கும் பொருட்டும் இந்த ஆயுர்வேத மருத்துவமனை அமைய உள்ளது. இந்த நோய்க்கு ஒரு நபருக்கு சிகிச்சை அளிக்க 45 நிமிடங்கள் ஆகும். அதன்படி நாள் ஒன்றுக்கு 10 நபர்களுக்கு சிகிச்சை அளிக்க இயலும்.

இந்த ஆயர்வேத எலும்பு மற்றும் மூட்டுவலி சிகிச்சை மருத்துவமனை தொடங்க எதிர்பார்க்கப்படும் செலவீனம் பின்வருமாறு :-

1) ஒருமுறை ஏற்படும் செலவீனம்

| | | |
|---|---|---|
| 1 | கட்டிட வசதி மற்றும் தளவாடங்கள் | ரூ.35.00 லட்சம் |
| 2 | மருத்துவ உபகரணங்கள் கம்ப்யூட்டர் உட்பட | ரூ. 4.00 லட்சம் |
| | மொத்தம் | ரூ.39.00 லட்சம் |

2) ஏற்படும் தொடர் செலவீனம் :- ஆண்டுக்கு

| | | |
|---|---|---|
| 1 | மருந்து வகைகள் | ரூ.10.00 லட்சம் |
| 2 | மருத்துவர் மற்றும் பணியாளர் ஊதியம் (out sourcing) | ரூ. 6.00 லட்சம் |
| | மொத்தம் | ரூ.16.00 லட்சம் |

எதிர்பார்க்கப்படும் மொத்த செலவீனம் ரூ.55.00 லட்சம்.

எனவே, மேற்கண்டவாறு ஆயுர்வேத எலும்பு மற்றும் மூட்டுவலி சிகிச்சை மருத்துவமனை தொடங்கவும் மற்றும் மேற்காணும் செலவீனங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 8015 /2013/ எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 152 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தலைமை அலுவலகத்தில் மூலிகை உணவகம் திறக்க அனுமதி கோருதல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சுமார் 300 அலுவலர்கள் / பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும், மாமன்ற உறுப்பினர்கள், மண்டலப் பணியாளர்கள், பொதுமக்கள் என சுமார் 500 பேர் பணிநிமித்தம் இத்தலைமை அலுவலகத்திற்கு வந்து செல்கின்றனர்.

இவர்கள் பயனடைய சென்னை மாநகராட்சியில் 1981ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் மூலிகை உணவகம் போல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தலைமை அலுவலகத்தில், சர்க்கரை நோயாளிகள், ரத்த அழுத்தம், ரத்த கொதிப்பு போன்ற நோய்க்கு ஆளானவர்கள் பயன்பெறும் வகையில் மூலிகை உணவகம் ஒன்று தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மருத்துவர்கள் கொண்ட குழு சென்னை மாநகராட்சியில் நடைபெற்றுவரும் மூலிகை உணவகத்தினை பார்வையிட்டு நமது மாநகராட்சியிலும் தொடங்கி கீழ்க்கண்ட உணவு வகைகள் தயார் செய்து விற்பனை செய்யலாம் என்று பரிந்துரை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1) | இட்லி வகைகள் | கருவேப்பிலை இட்லி<br>ஆவாரம்பூ இட்லி<br>துளசி இட்லி<br>தினை இட்லி<br>சாமை இட்லி |
| 2) | அடை வகைகள் | முருங்கைக் கீரை அடை<br>நவதானிய அடை<br>முசுமுசுக்கை அடை |

| | | |
|---|---|---|
| 3) | பணியாரம் | குழிபணியாரம்<br>கருப்பட்டி பணியாரம் |
| 4) | களி | உளுந்து களி<br>சுக்கு களி<br>திணை எள் உருண்டை<br>இயற்கை லட்டு<br>சைவ ஆம்லெட் |
| 5) | பகல் மதிய சாப்பாடு | புழுங்கல் அரிசி சாதம் |
| 6) | சாம்பார் வகைகள் | ஆவாரம்பூ<br>முருங்கைக்கீரை<br>முடக்கற்றான் கீரை |
| 7) | ரச வகைகள் | கொள்ளு<br>வேப்பம்பூ<br>மனத்தக்காளி |
| 8) | காரக்குழம்பு வகைகள் | சுண்டை வற்றல்<br>பூண்டு காரக்குழம்பு |
| 9) | மோர் வகைகள் | இஞ்சி<br>கருவேப்பிலை |
| 10) | துவையல் வகைகள் | பிரண்டை<br>கொள்ளு<br>தூதுவாளை |
| 11) | பிற பானங்கள் | மூலிகை டீ<br>மூலிகை சூப் வகைகள்<br>மூலிகை பழரசங்கள் |

இந்த மூலிகை உணவகத்தை லாபநோக்கம் இல்லாமலும், மகளிர் சிக்கன சங்க நாணய உறுப்பினர்களைக் கொண்டு நடத்தவும், மேலும் இதற்கான செலவீனங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 4089 /2013/ எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 153 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சிப்பப்பணிகளில் சிப்பம்-1 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 13 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.97.50 லட்சம் ஒதுக்கப்பட்டது. மேற்படி சிப்பப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக கடந்த 31-05-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தனர்.

1) தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை.
2) தி/ள்.எல்.ஜி.பாலகிருஷ்ணன் & பிரதர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்
3) தி/ள்.ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ், சென்னை

மேலே படிக்கப்பட்ட மூன்று நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 21-06-2013 அன்று கூடி விவாதித்து மேற்படி மூன்று நிறுவனங்களில் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களது மட்டும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும், அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 01-07-2013 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளி கொடுத்தனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் விலை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை | 97,50,000.00 | 116,05,204.00 |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை ரூ.116,05,204/-க்கு (ஒரு வாகனத்தின் விலை ரூ.8,92,708/- வீதம்) கொடுத்திருந்தனர். இவ்வொப்பந்தப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 08-07-2013 அன்று கூடி விவாதித்து மேற்படி நிறுவனத்திடம் இதே பணிக்கு ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத் திட்டத்தின் (IUDM) கீழ் எடுக்கப்பட்ட சிப்பம்-5 ல் ஒரு வாகனத்தின் விலை ரூ.8,05,000/-க்கு கொடுத்திருந்தனர். இவ்விலைக்கு விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தனர். இதனைத்தொடர்ந்து கேட்கப்பட்டதில் மேற்படி நிறுவனம் அவர்களது 09-07-2013 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.116,05,204/- லிருந்து ரூ.1,04,65,000/-க்கு (ஒரு வாகனத்தின் விலை ரூ.8,05,000/- வீதம்) பழைய விலைக்கே விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

விலை குறைப்பிற்குப் பின்னர் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 13-08-2013 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தார் ரூ.1,04,65,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி கூடுதலாகவுள்ளதால் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-1 ன் கீழ் எடுக்கப்பட்ட முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 13 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தார் ரூ.1,04,65,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 3393/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 154 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் உள்ள குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதி, மேடான பகுதி, பிரதான குழாய் கசிவு ஏற்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்பொழுது குடிநீர் தடை ஏற்படும் காலங்கள் மற்றும் அன்றாட குடிநீர் சம்பந்தமான புகார் பிரச்சனைக்கேற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் பாரதி பூங்கா மேல்நிலைத் தொட்டி (HLR), கணபதி (MSR) மேல்நிலைத் தொட்டி, வரதராஜபுரம் மேல்நிலைத் தொட்டி மற்றும் புலியகுளம் மேல்நிலைத்தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தனியார் டேங்கர் லாரியின் ஒப்பந்தத் தொகை முடிவடையவுள்ளதால் புதியதாக உத்தேச செலவினம் ரூ 75.00 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மான எண். 75 நாள்-18.06.2013 –ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதைத் தொடர்ந்து இப்பணிக்கு கடந்த 22.07.2013 அன்று முதல் அழைப்பாக இரு உறைகள் முறையில் மின்னனு (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு கே.எஸ்.பாரதி, திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகாண் கூறுகள் (Qualification criteria) திறனாய்வு செய்ததில் திரு கே.எஸ். பாரதி, திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர்.

எனவே, மேற்படி தகுதிகாண் கூறுகளில் தேர்வு பெற்றுள்ள திரு கே.எஸ். பாரதி, திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று விலைப்புள்ளி உறையை திறக்க ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்று விலைப்புள்ளி உறையை திறக்க ஆணையர் அவர்கள் 23.07.2013ல் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 25.07.2013ல் விலைப்புள்ளி உறைகள் திறக்கப்பட்டதில் திரு கே.எஸ். பாரதி, திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு |
| 1 | திரு கே.எஸ். பாரதி | 1 | 911 | 1 | 500 |
| 2 | திரு ஜி.சசிக்குமார் | 1 | 929 | 1 | 529 |
| 3 | திரு. ஜி.செந்தில் குமாா | 1 | 948 | 1 | 551 |

மேற்படி விலைப்புள்ளிகளில் முதலாவதாக குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு கே.எஸ். பாரதி அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க கேட்டதில், அவர் தமது 30.07.2013ம் தேதிய கடிதத்தில் டீசல் விலையேற்றம் மற்றும் லாரி உதிரி பாகங்கள் விலையேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 9000லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் |
| 1 | திரு கே.எஸ். பாரதி | 911 | 500 | 899 | 497 |

தற்சமயம் உள்ள ஒப்பந்தப்புள்ளி முடிவடைய உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு கே.எஸ். பாரதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (விலைக்குறைப்பிற்குபின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திற்கு) ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 5087/2013/ எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 155 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18-06-2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9322/12/ எம்.டி.2 | வார்டு எண்.71 காமராஜர் சாலையில் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் கட்டுதல் | 4.50 | 21-05-2013 இரண்டாவது அழைப்பு | 1. திரு.கே. தண்டபாணி கோயம்புத்தூர் 7.02% அதிகம் 2. தி/ள் சிட்டி டெவலப்பர்ஸ், கோயம்புத்தூர் 2.23% அதிகம் | தி/ள் சிட்டி டெவலப்பர்ஸ், கோயம்புத்தூர் 2.23% அதிகம் |
| 2 | 11482/12/ எம்.டி.2 | வார்டு எண்.9 அம்பேத்கார் நகரில் பொதுக் கழிப்பிடம் திரும்பக் கட்டுதல் | 9.00 | 21-05-2013 மூன்றாவது அழைப்பு | திரு.என். முருகேசன் கோயம்புத்தூர் 4.01% அதிகம் | திரு.என். முருகேசன் கோயம்புத்தூர் 4.01% அதிகம் |

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1 முதல் 2 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9322/2012 /எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 156 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி மற்றும் ஆணையர் அவர்களின் உத்திவின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளிலும் குழாய் பொருத்துநர் உரிமம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து 12.07.2013 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

குடிநீர் குழாய் பொருத்துநர் உரிமம் வழங்கக் கோரி 66 புதிய நபர்களிடமிருந்தும் ஏற்கனவே பிளம்பர் உரிமம் பெற்று பணி புரிந்த 55 நபர்களிடமிருந்தும் மொத்தம் 121 மனுக்கள் பெறப்பட்டது. 121 நபர்களின் சான்றிதழ்கள் மற்றும் தகுதியினை சரிபார்க்க 18.07.2013 மற்றும் 19.07.2013 ஆகிய தேதிகளில் அசல் ஆவணங்களுடன் நேரில் ஆஜராக கடிதம் மேற்கண்ட மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டது. அசல் ஆவணங்களுடன் வருகை புரிந்தவர்களை உதவி நிர்வாக பொறியாளர்கள் மற்றும் உதவி/இளம் பொறியாளர்கள் குழு நேர்காணல் செய்து ஆவணங்கள் சரிபார்த்தனர். புதிதாக விண்ணபித்த 66 நபர்களில் 7 நபர்கள் நேர்காணலுக்கு வரவில்லை. மீதமுள்ள 59 நபர்களில் 37 நபர்களுக்கும் மாநகராட்சியில் ஏற்கனவே குழாய் பொருத்துனராக பணிபுரிந்த 55 நபர்களில் 24 நபர்களுக்கும் குழாய் பொருத்துநர் உரிமம் வழங்க மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்ட அனைத்து தகுதிகளும் உள்ளதால் அவர்களுக்கு குழாய் பொருத்துநர் உரிமம் வழங்க தேர்வு செய்யப்பட்டனர்.

புதிதாக மனு செய்த இரண்டு நபர்களும், ஏற்கனவே குழாய் பொருத்துநராக மாநகராட்சியில் பணிபுரிந்த 18 நபர்கள் 45 வயதுக்கு மேல் 60 வயதுக்குட்பட்டவர்களாக உள்ளனர். மாமன்ற தீர்மான எண் 122 நாள் 24.07.2013ன் படி 60 வயது வரை குழாய் பொறுத்துநர் உரிமம் புதுப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குழாய் பொருத்துநர் உரிமம் வழங்க தேர்வு செய்யப்பட்டவர்கள் ரூ.1,00,000/—க்கு கடன் தீர்வை சான்று சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்டவர்களில் பலர் கடன் தீர்வை சான்று சமர்ப்பிக்க இயலாத நிலையில் உள்ளதால் கடன் தீர்வை சான்றிற்கு மற்றாக ரூ. 1,00,000/— தொகையாக செலுத்த அனுமதிப்பது குறித்தும் மற்றும் 45 வயதுக்கு மேல் 60 வயதுக்குட்பட்ட ஏற்கனவே மாநகராட்சியில் குழாய் பொருத்துநர்களாக உரிமம் பெற்றிருந்த 18 நபர்களுக்கும் புதிதாக மனு செய்த 2 நபர்களுக்கும் இந்த ஆண்டு மட்டும் (2013—2014) வயது வரம்பு 45லிருந்து விலக்களித்து உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண் : 3851/2007/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 157 நாள் 29.08.2013</u>**

பொருளை அனுமதித்தும், அவினாசிலிங்கம் நிகர்நிலை பல்கலைக் கழகம், கோவை மற்றும் ராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிறுவனம், கோவை நிறுவனங்களால் வழங்கப்பட்ட குழாய் பொருத்துனா் உரிமம் பெற்றுள்ள நபர்களுக்கும் இம்முறை சலுகையாக உரிமம் வழங்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

| | |
|---|---|
| <u>பொருள்:</u> | கோயம்புத்தூர் மாநகராட்சி — மாமன்ற தீர்மான எண்.173 நாள்.29.12.2009ன்படி குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல்— திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் வைப்புத் தொகை மற்றும் மேற்படி கட்டணவிகிதங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளை 01.10.2013 முதல் நடைமுறைப்படுத்த மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய (Gazette Notification) மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் — தொடர்பாக. |
| <u>பார்வை:</u> | மாமன்ற தீர்மான எண்.173, நாள்.29.12.2009. |

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மான எண்.173 நாள்.29.12.2009இல் தீர்மானிக்கப்பட்ட திருத்திய குடிநீர் கட்டண விவரங்கள் மற்றும் உபவிதிகளை அமுல்படுத்த கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கியுள்ளது.

(அ) வீட்டு உபயோக முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புக்கு  உண்டான குடிநீர் கட்டண விபரம்;.

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு |
|---|---|---|
| அ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 15,000 லிட்டர் வரை | ரூ.100.00 (குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம்) |
| 2) | 15,001 முதல் 20,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 20,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,10.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.100.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.5000.00 |

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக முறையில் மொத்த விநியோகம் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|
| ஆ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 7500 லிட்டர் வரை | ரூ.5.25 |
| 2) | 7501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,11.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.900.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.10000.00 |

ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்கப்படும்  குடிநீர் கட்டண விபரம்.

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு 20 எம்.எம். | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| அ | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | | |
| 1. | 7500 லிட்டர் வரை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| 2. | 7501 – 10000 லிட்டர் வரை | ரூ. 13.50 | ரூ. 13.50 |
| 3. | 10001 – 150000 லிட்டர் வரை | ரூ. 18.00 | ரூ. 18.00 |
| 4. | 150001  லிட்டருக்கு மேல் | ரூ. 22.50 | ரூ. 22.50 |
| | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | ரூ.525.00 | ரூ.1350.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ10000.00 | ரூ.15000.00 |

குழாய் முறையில் குடிநீர் விநியோக முறை

| | | |
|---|---|---|
| குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60.00 |

எனவே மாமன்றத் தீர்மானம் 173 நாள். 29.12.2009ல் அனுமதிக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள், வைப்புத் தொகை, மற்றும் மேற்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விகிதிங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளை 01.10..2013 முதல் நடைமுறைப்படுத்தவும் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யவும் (Gazette Notification) மாமன்ற அனுமதி வேண்டி மாமன்றத்தாள் (பொருள்) ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> – கட்டண விகிதங்கள் மாமன்றத்தால் 29.12.2009ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்ட பிறகு (After Gazette Publication) 01.10.2013 முதல் நடைமுறைப்படுத்தலாம்.

ந.க.எண்.4848/2003/கு.வி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 158 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பில்லூர் முதலாவது திட்டத்திலிருந்து 65.50 எம்.எல்.டி. கொள்ளளவு நீர் வரும் வகையிலும் வழியோர சாலை கிராமங்களுக்கும் 65.50 எம்.எல்.டி. ஆக மொத்தம் 131 எம்.எல்.டி. கொள்ளளவு நீர் வரும் வகையிலும் எதிர்கால பில்லூர் திட்டம் – II கொள்ளளவு 131 எம்.எல்.டி. கொள்ளளவு சேர்த்து 262 எம்.எல்.டி. கொள்ளளவு நீர் மலை குகை (Tunnel) வடிவமைத்து பெரிய கோம்பை மலை மற்றும் கட்டன் மலை பகுதியில் (3.85 கி.மீ நீளம் மற்றும் 0.85 கி.மீ.நீளம்) முறையே சுத்திகரிக்கப்படாத நீர் (Raw Water) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் கொண்டு வரும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோவை மாநகராட்சிக்கு தனியாக 125 எம்.எல்.டி. கொள்ளளவு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் பொருட்டு, நீர் அதே மலை குகைகள் வழியாக வரும் வகையிலும் அதைத் தொடர்ந்து மாநகராட்சிக்கு தனியாக குழாய்கள் அமைத்து மேல்நிலைத் தொட்டி வரை கொண்டு வர விரிவான திட்டப் பிரேரனைகள் மதிப்பீடுகளுடன் தயார் செய்தது.

மேற்படி விரிவான திட்ட பிரேரனைகளை மாநகராட்சி மூலம் JNNURM திட்டம் (மத்திய அரசு மானியம் (50%) மாநில அரசு மானியம் (20%) மற்றும் மாநகராட்சி பங்களிப்பு (30 %) விகிதத்தில் செயல்படுத்த மேற்படி திட்டம் மாநில தேர்வு கமிட்டி ஒப்புதல் பெற்று மத்திய தேர்வு குழு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு மாநகராட்சி மூலம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மாநகராட்சி மூலம் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மாநகராட்சிக்கு தனியாக பில்லூர் II குடிநீர் திட்டம் மூலம் எடுக்கப்படும் நீர் அதே மலை குகை வழியாக சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் வரும் வகையில் உள்ளது. இதனால் மலைப்பாதையை பராமரிக்கவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் மாநகராட்சி ஆகிய இரண்டு துறையின் நீர் ஒரே மலை குகை பாதையில் வருவதை கணக்கிட்டு பராமரிப்பது எதிர்காலத்தில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்படி சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு சுத்திகரிக்கப்பட்ட நீர் வரும் வகையில் மலை குகை பாதையை மாநகராட்சி மூலம் அதே கட்டன் மலை பகுதியில் முதலில் அமைக்கவும் அதற்கான மதிப்பீடு ரூ. 12.49 கோடி அரசு மூலம் மானியமாகவோ (அடிப்படை வசதி இடைவெளி நிரப்பும் நிதி அல்லது இதர மானிய நிதி) அல்லது மாநில அரசு மானியம் மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் அல்லது மாநகராட்சி பொது நிதி மூலம் செயல்படுத்த அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** சுத்திகரிக்கப்பட்ட நீர் வரும் வகையில் தனியாக கட்டன் மலையில் மலைப்பாதை அமைத்து தண்ணீர் கொண்டுவர மதிப்பீடு ரூ. **12.49** கோடியை அரசு முழு மானியமாக பெற்று (அடிப்படை வசதி இடைவெளி நிரப்பும் நிதி அல்லது இதர மானிய நிதி) அல்லது மாநில அரசு மானியம் மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் அல்லது மாநகராட்சி பொது நிதி மூலம் செயல்படுத்த முதல் பகுதியாக கட்டன் மலை பகுதியில் மலை குகை பாதை அமைத்து மாநகராட்சியின் சுத்திகரிக்கப்பட்ட நீர் வரும் வகையில் செயல்படுத்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: **2896/08**/ஜேஎன்**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 159 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் மூன்றின்(TNUDF-III) கீழ் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ.**3556** இலட்சம் கடன் உதவி வழங்க தீர்மானித்து கீழ்கண்டுள்ளவாறு சிறப்பு நிபந்தனைகளை தெரிவித்துள்ளது.

<u>வட்டி</u>

கடனுக்கான வருட வட்டி விகிதம் **8.25**% காலாண்டுக்கு இடைநிறுத்தி சேர்த்தல் வகையில் அரையாண்டுக்கொருமுறை தவணைத்தொகை செலுத்தப்பட வேண்டும், எனினும் கடனளிக்கும் போது நடைமுறையில் உள்ள ஆண்டு வட்டி விகிதம் எதுவோ அது அமுல்படுத்தப்படும். கடன் திருப்பி செலுத்தும் காலத்தில் ஐந்தாண்டுக்கொருமுறை ஆண்டு வட்டி விகிதம் மாற்றி அமைக்கப்படும்.

<u>திருப்பி செலுத்தும் காலம்</u>

கடன் திருப்பி செலுத்தும் காலம் ஏழு ஆண்டுகாலமாகும். முதல் தவணை வாங்கிய தேதியிலிருந்து கடன் தவணை திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு ஆண்டு காலம் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் பத்து அரையாண்டு தவணைகளாக கடன் திருப்பி செலுத்துவதற்கான கால அளவு ஐந்தாண்டுகளாகும். தவணைத் தொகை செலுத்தாத இரண்டாண்டு விடுமுறை காலத்திற்கான வட்டித்தொகை செலுத்தப்பட வேண்டும்.

<u>கடன் பெறுவதற்கான கால அளவு</u>

கடன் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்தில் கடன் அனுமதி செல்லத்தக்கதாக இருக்கும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கடன் பயன்படுத்திக் கொள்ள தவறும் பட்சத்தில் கால அளவை நீட்டித்துக் கொள்ள மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றி மீண்டும் கோரும் பட்சத்தில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

<u>திட்டச் செயலாக்கம்</u>

முறைப்படியான இந்த சாலை மேம்பாட்டுத் திட்டம், திட்டம் தொடங்கிய ஓராண்டுக்குள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

<u>திட்டச் செலவு மற்றும் நிதி வழிவகை</u>

இந்த திட்டத்தினை மாநகராட்சி மொத்த திட்டச் செலவான ரூ.**5080** லட்சம் மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டத்துடன் செய்து கொண்ட ஒப்பந்த நிதி வழிவகை திட்ட வரம்புக்குள்ளாக செயல்படுத்துதல் வேண்டும்.

<u>நிதி வழி வகை</u>

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| உலக வங்கியின் உதவியுடன் TNUDP III –ன் கீழ் TNUDF லிருந்து கடன் | – | ரூ. **3556.00** |
| உலக வங்கியின் உதவியுடன் TNUDP III லிருந்து பெறப்டும் நிதி உதவி | – | ரூ. **1016.00** |
| ULB பங்கு | – | ரூ. **508.00** |
| | | ரூ. **5080.00** |

<u>குறித்த கால கடன் விநியோக முறை</u>

மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் குறித்த கால கடன் வழங்கப்படும்.

<u>பின்பயன் கருதி ஒதுக்கப்படும் கடன் சீராக்க நிதி (DSRF)</u>

குறிப்பிட்ட காலத்தில் வட்டி மற்றும் கடன் தவணைகளை திருப்பிச் செலுத்தும் வண்ணம் TNUDF பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. எனவே நிதி ஆதாரத்தை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சி DSRF கணக்கில், பின்பயன் கருதி ஒதுக்கப்படும் கடன் சீராக்க நிதி (DSRF) கணக்கொன்றினை துவக்கி அதில் இரண்டு அரையாண்டு தவணைத் தொகையினை (ஓராண்டுக்கு தேவையான நிதி) செலுத்த வேண்டும்.

DSRF கணக்கானது ULB மற்றும் TNUDF சேர்ந்து செயல்படுத்தும் வண்ணம் ஒரு நிரந்தர வைப்புக் கணக்காக பராமரிக்கப்படும். மாநகராட்சி செலுத்த வேண்டிய தொகையினை செலுத்த தவறும் பட்சத்தில் மேற்படி நிரந்தர வைப்புத் தொகையினை முடித்துக் கொண்டு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தக் கோரி TNUDF அறிவுறுத்தும். அதன்படி முடித்துக்கொண்ட ஆறுமாத கால அவகாசத்திற்குள் மீண்டும் மேற்படி நிரந்தர வைப்புத் தொகையினை புதுப்பிக்கப் படவேண்டும்.

<u>பிற நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்</u>

1) ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்தல் மற்றும் பொருள் மற்றும் சேவைகள் கொள்முதல் செய்யும் வழிமுறைகள் நடைமுறையில் உள்ள IBRDயின் வழிமறைகளின்படி இருத்தல் வேண்டும். மேலும் முறையான அதிகாரிகளின் அனுமதியுடன் செயல்படுத்தப்பட வேண்டும். TNDIFSL ன் அனுமதி பெற்றபின், ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் விதிமுறைகளை மாநகராட்சி செயல்படுத்த வேண்டும்.

2) திட்டச் செயலாக்க காலங்களில் மாதாந்திர திட்ட முன்னேற்ற தகவல் அறிக்கை மற்றும் மாதாந்திர செலவு கணக்கு அறிக்கையினை TNUIFSL க்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3) திட்ட செயலாக்க காலங்களில், வேலைகளின் வளர்ச்சியை கண்காணிக்கவும், திட்ட செயலாக்கத்தில் தன்னுடைய அறிவுரைகளை சேர்க்க கோரவும், TNUIFSL-க்கு அதிகாரம் உள்ளது.

4) திட்டம் செயல்படுத்துவதில் ஏற்படும் தாமதம் மற்றும் விலையேற்றத்தினால் ஏற்படும் அதிகப்படியான செலவுகளை மாநகராட்சி தன்னுடைய நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள வேண்டும்.

5) TNUIFSL–ன் முன் அனுமதியின்றி, TNUIFSL அல்லாத பிற நிதி நிறுவனங்களிலிருந்து எந்த ஒரு புதிய கடன்களும் பெறக்கூடாது.

6) TNUIFSL–னால் உருவாக்கப்பட்ட சுற்றுப்புற மற்றும் சமூக கோட்பாடுகளின்படி, இந்தத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும்.

7) சாலை, மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்புச் செலவுகளை மாநகராட்சி தன்னுடைய பொது நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டும்.

எனவே, தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் மூன்றின் (TNUDF) மேற்படி நிபந்தனைகளை ஏற்று சாலை அமைக்கும் திட்டத்திற்கான கடன் உதவி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7955/ 2013/ பி1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 160 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் III-ன் கீழ் மானிய நிதி I-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.1016 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதியுதவியை பயன்படுத்த TNUIFSL நிறுவனம் சில நிபந்தனைகளை தெரிவித்துள்ளது.

1. நிதியுதவியை பயன்படுத்திய திட்ட வளர்ச்சி பற்றி மாதாந்திர தகவல்களை TNUIFSL-னால் கூறப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
2. சேவை, பொருள், தளவாடங்கள் மற்றும் பொருட்களை, IBRDயின் வழிகாட்டுதலின்படி பெறப்பட்டு நிதியளிக்க வேண்டும்.
3. TNUIFSL-ன் ESF வழிகாட்டுதலின்படி மறுசீரமைப்பு மற்றும் செயல்முறை திட்டம், நடைமுறைப்படுத்தப்படும்.

4. மூலதன செலவுகளைப் பொருத்தமட்டில், நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் திட்டங்களுக்கு இந்த நிதி உதவியானது உபயோகப்படுத்தப்பட வேண்டும். கடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பயனாளிகளின் தொகுப்பு மாற்றுதலுக்குட்பட்டதல்ல. அவ்வகையான மாறுதல் நகர்ப்புற ஏழைகளின் எண்ணிக்கை குறையும் நிலையில் இருப்பின், அளிக்கப்பட்ட நிதியுதவி, கடனாக மாற்றப்பட்டு நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் TNUDF-ன் கடனாக கருதப்படும்.

எனவே, TNUIFSL– நிறுவனத்தின் நிபந்தனையை ஏற்று மானியத்தினை பயன்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7955/ 2013/ பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 161 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர்மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64- சிங்காநல்லூர் பேருந்துநிலையத்தை தி/ள். சாந்தி சோசியல் சர்வீசஸ், கோயம்புத்தூர் என்ற தனியார் தொண்டார்வு அறக்கட்டளை நிறுவனம் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்ய அனுமதி வழங்க – மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64-ல் உள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தை தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு சுமார் 10 இலட்சம் செலவு செய்யப்பட்டு வருகின்றது.தற்பொழுது மேற்படி பேருந்து நிலையத்தை தி/ள். சாந்தி சோசியல் சர்வீசஸ், கோயம்புத்தூர் என்ற தனியார் தொண்டார்வு அறக்கட்டளை நிறுவனம் பராமரிப்பு செய்ய அனுமதி கோரியுள்ளனர். மேற்படி அறக்கட்டளைக்கு பேருந்து நிலையத்தை பராமரிப்பு செய்ய தொகை ஏதும் நிர்ணயம் செய்யப்படுகிறதா என இவ்வலுவலக ந.க.எண் 9484/2013/கிடி4. நாள் 08.08.2013-ம் தேதிய கடிதத்தில் கேட்கப்பட்டது.மேற்படி அறக்கட்டளை எவ்வித இலாப நோக்கம் இன்றியும், பொதுமக்களிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்காமலும், மாநகராட்சியிடம் எவ்வித சலுகையும் எதிர் நோக்கலும் இல்லாமல் ''Free of Cost'' அடிப்படையில் பராமரிப்பு செய்வதாக தெரிவித்துள்ளனர்.

எனவே சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தை பராமரிக்க ஆகும் கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டு ''Free of Cost'' என்ற அடிப்படையில் பராமரிக்க ஒப்பு கொண்டுள்ள தி/ள். சாந்தி சோசியல் சர்வீசஸ், கோயம்புத்தூர் என்ற தனியார் தொண்டார்வு அறக்கட்டளை நிறுவனத்திற்கு மாதிரி அடிப்படையில் நிபந்தனைகளுடன் 01.10.2013 முதல் 30.09.2016 வரை மூன்றாண்டிற்கு பராமரிப்பு செய்வதற்கும், ஒவ்வொரு ஆண்டும் பரிசீலனை செய்து புதுப்பிப்பது தொடர்பாகவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9484/2013/கிடி4.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 162 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

பொருள் வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 28க்கு உட்பட்ட சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக

பார்வை உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 05.07.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 28ல் சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் ரூ.29.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரை தளத்தில் 5 (ஐந்து) கடைகள் உள்ளன. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.53.52/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரைதளம்**

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 20 X 11 | 220 | 11774/- |
| 2 | 20 X 10 | 200 | 10704/- |
| 3 | 20 X 11 | 220 | 11774/ |
| 4 | 20 X 11 | 220 | 11774/ |
| 5 | 20 X 11 | 220 | 11774/ |

**வைப்பு தொகைகள்**

| வைப்பு தொகை | காப்பு தொகை | சால்வென்சி தொகை | சால்வென்சிக்கு பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.1,50,000 | ரூ.1,00,000 | ரூ.2,00,000 | ரூ.50,000 |

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையின் அடிப்படையில் கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 89 நாள் 23.08.2013 ல் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் மாற்றம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வைப்பு தொகைகள்

| வைப்பு தொகை | காப்பு தொகை | வங்கி உறுதி சான்றிதழ் | வங்கி உறுதி சான்றிதழ் பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.1,00,000 | ரூ.75,000 | ரூ.2,00,000 | ரூ.50,000 |

இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 163 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 89 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

பொருள் வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 55க்கு உட்பட்ட செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளை தமிழ்நாடு மின்சார வாரியம், உதவி செயற்பொறியாளர், பி.என்.பாளையம் அலுவலகம் மற்றும் வசூல் மையம் செயல்பட ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக

பார்வை
1. செயற்பொறியாளர் , மையம் கோவை மின் பகிர்மான வட்டம் அவர்களது கடிதம் நாள் 21.12.2012
2. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 12.08.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் பி.என்.பாளையம், செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தரை தளத்தில் 3(மூன்று) கடைகள் கட்டப்பட்டள்ளது. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.28.77/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 2ல் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரைதளம்**

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 21 X 11 | 231 | 6646/- |
| 2 | 21 X 11 | 231 | 6646/ |
| 3 | 21 X 11 | 231 | 6646/ |

பார்வை 1ல் காணும் செயற்பொறியாளர் / மையம் கோவை மின் பகிர்மான வட்டம் அவர்களது கடிதத்தில் மேற்படி கடைகளில் மின்கட்டணம் வசூல் மையம் அமைப்பதற்கும், உதவி செயற்பொறியளர் பி.என்.பாளையம் பிரிவு அலுவலகம் செயல்படுவதற்கும் ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையினை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு கடைகளை ஒதுக்கீடு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் - 91 நாள் 23.08.2013 ல் மேற்படி பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 08860/2013/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 164 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 91 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற மூன்றாவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆறு கடைகளுக்கு மூன்றாவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.07.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 1, 2 மற்றும் 3 ஆகிய மூன்று கடைகளுக்கு மட்டும் கீழ் குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மீதமுள்ள கடைகளுக்கு ஒருவரும் ஏலத்தொகை செலுத்தப்படவில்லை.

மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

**கடை எண் 1 (அரசு மதிப்பு ரூ.3500/- கடையின் அளவு 10 x 11)**

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 12.06.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை ரூ. | 25.07.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமதி.பரணி காஞ்சனா | - | 12300/- |
| 2 | திரு.எஸ்.ஜெபமாலைதாஸ் | 17500/- | 12999/- |

மேற்படி கடைக்கு 12.06.2013 ம் தேதிய ஏலத்தில் திரு.எஸ்.ஜெபமாலைதாஸ் என்பவர் மாதம் ஒன்றுக்கு ரூ.17500/- க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார். தற்பொழுது இக்கடைக்கு சென்ற முறை ஏலத் தொகையை காட்டிலும் குறைவாக ரூ.12999/- க்கு ஏலக்கோரிக்கை அளித்துள்ளார். எனவே 12.06.2013ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையின் அடிப்படையில் ஏலதாரருக்கு கடையினை ஒதுக்கீடு செய்யலாம்.

**கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ.3500/- கடையின் அளவு 10 x 11)**

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 12.06.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை ரூ. | 25.07.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.கீர்த்தகிரி | - | 5200/- |
| 2 | திரு.பி.ராஜா | 17500/- | 12999/- |

மேற்படி கடைக்கு 12.06.2013 ம் தேதிய ஏலத்தில் திரு.பி.ராஜா என்பவர் மாதம் ஒன்றுக்கு ரூ.17500/- க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார். தற்பொழுது இக்கடைக்கு சென்ற முறை ஏலத் தொகையை காட்டிலும் குறைவாக ரூ.12999/- க்கு ஏலக்கோரிக்கை அளித்துள்ளார்.

எனவே 25.07.2013ம் தேதிய ஏலக் கோரிக்கையினை காட்டிலும் 12.06.2013ம் தேதிய ஏலக் கோரிக்கை உயர்ந்தபட்சமாக உள்ளதால் 12.06.2013ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையின் அடிப்படையில் ஏலதாரருக்கு கடையினை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் - 90 நாள் 23.08.2013 ல் மேற்படி பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3043/2013/அ1(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 165 நாள் 29.08.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 90 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தது (நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில் )- மாமன்றத்தில் ஒப்பதல் அளிக்கப்பட்டு உயர்வு செய்யப்பட்ட கடைகளின் வாடகையினை குறைப்பது - தொடர்பாக .

**பார்வை :**
1. மாநகர மன்ற தீர்மான எண்.249 நாள். 25.10.2012
2. வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.24.01.2013.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட (நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில்) கடைகளுக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மான எண்.249 நாள் 25.10.2012-ல் பொதுப் பணித்துறை மதிப்பீட்டின்படி 01.09.2012 முதல் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை கடை உரிமதாரர்கள் குறைக்க கோரியதின் பேரில் பார்வை 2-ல் காணும் வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று கீழ் கண்டவாறு கடைகளுக்கு வாடகை குறைக்கப்பட்டது.

| வ. எண். | வரிவிதிப்பு எண். | கடை எண். | பெயர் | மாமன்ற தீர்மான எண்.249, 25.10.2012-ன் படி 01.09.2012 முதல் மூன்று வருடங்களுக்கு உயர்வு செய்யப்பட்ட வாடகை.ரூ. | குறைக்கப் பட்ட வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | 31200 | 1 | செல்வி கே.விமலா | 2441 | 1500 |
| 2 | 31201 | 2 | திரு.கே.முத்துசாமி | 2441 | 1500 |
| 3 | 31202 | 3 | திரு.டி.எஸ்.மணி | 2441 | 1500 |
| 4 | 31203 | 4 | திரு.எம்.அப்பாஸ் | 2441 | 1500 |
| 5 | 31204 | 5 | திரு.எஸ்.ரவி | 2441 | 1500 |
| 6 | 31205 | 6 | திரு.எ.சின்னசாமி | 2441 | 1500 |
| 7 | 31206 | 7 | திரு.எம்.துரை | 2441 | 1500 |
| 8 | 31207 | 8 | திரு.எச்.எம்.ஹனிபா | 2441 | 1500 |
| 9 | 31208 | 9 | திரு.கே.ஜெயராமன். | 2441 | 1500 |
| 10 | 31209 | 9A | திரு.எ.பாலன். | 1830 | 1500 |

மேற்படி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைக்கப்பட்ட வாடகைக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.7935/2012/அ9 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 166 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129 நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன்படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும் மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

1. வார்டு எண்.84 உக்கடம் (பழைய மீன் மார்க்கெட் வளாகம்) மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 28 கடைகள்
2. வார்டு எண்.54 காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 25 கடைகள்
3. வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிக வளாக கடைகள்- 11 கடைகள்.
4. வார்டு எண்.84 உக்கடம் பழைய மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாக கடைகளில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள திரு. நாச்சிமுத்து, திரு.கே.பழனிசாமி, திரு.எம்.பழனிசாமி மற்றும் திரு.எம்.துரைசாமி (W.P.No.3985/1995) ஆகியோர் வழக்குகளை வாபஸ் பெறும் பட்சத்தில் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு வாடகையினை பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும் இத்துடன் சேவை வரி ரூ.12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1, 2, 3 மற்றும் 4 ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 167 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் மைய அறையை மாதாந்திர வாடகை கடையாக மாற்றி பொது ஏலத்தில் சேர்ப்பது - தொடர்பாக.

பார்வை 1.ஆணையர் அவர்களின் 29.06.2013-ம் தேதிய உத்திரவு .
2.வ.வி.ம.நி.கு.தீ.எண்.77 நாள்.23.08.2013.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் மைய அறையை மாதாந்திர வாடகை கடையாக மாற்றி பொது ஏலத்தில் சேர்த்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின் படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் மைய அறை | 224சதுரடி | 72.84 | 16,317/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.08-2013-ம் தேதிய தீர்மான எண்.77-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமனறத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,00,000/- |
| காப்புத்தொகை | - ரூ.75,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.5,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ.1,50,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்4363/2013/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 168 நாள் 29.08.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 77 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.51 சீனிவாசபுரம் காய் கறி மார்க்கெட்டில் காய் கடை எண்.28-யை உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – திரு.P.A.உசேன் அவர்களுக்கு ஒப்படைத்தல் - தொடர்பாக. |
|---|---|
| பார்வை | வ.வி.ம.நி.கு.தீ.எண்.75 நாள்.23.08.2013 |

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 25.07.2013-ம் தேதியில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 25.07.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | <u>சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடை</u> காய்கறி கடை எண். 28 (தற்போது உள்ள நிலையில்) (அரசு மதிப்பு ரூ.975/-) கடை ஒன்றுக்கு | 1050/- (மின் ஏலம்) கடை ஒன்றுக்கு | திரு.P.A.உசேன் |

25.07.2013-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் மேற்கண்ட கடைக்கு அரசுமதிப்பு ரூ.975/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.1050/-க்கு திரு.P.A.உசேன் என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி கடையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.08-2013-ம் தேதிய தீர்மான எண்.75-ல் உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 169 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 75 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 – பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் ATM - புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் மற்றும் இந்தியன் வங்கியின் கிளை அலுவலகம் ஆகியவைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்தல் தொடர்பாக

பார்வை : 1.தி/ள்.இந்தியன் வங்கியின் 08.2013-ம்தேதிய கடிதம்.
2.உதவி பொறியாளர் குறிப்பு நாள்.16.08.2013
3.வ.வி.ம.நி.கு.தீ.எண்.92 நாள்.23.08.2013

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.82 மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தற்போது செயல்பட்டு வருகின்ற ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் ATM மையம், புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் மற்றும் இந்தியன் வங்கியின் கிளை அலுவலகம் ஆகியவைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | பெயர் | அளவீடு சதுரடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை ரூ. 60/சதுரடி. |
|---|---|---|---|
| 1 | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ATM மையம் | 11.5x11.5 =132.25 | 7935 |
| 2 | புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் | 11.5x11.5 =132.25 | 7935 |

| வ.எண் | பெயர் | அளவீடு சதுரடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை ரூ. 57/சதுரடி |
|---|---|---|---|
| 3 | இந்தியன் வங்கியின் கிளை அலுவலகம் | 612 | 34884 |

மேற்படி வாடகையை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.08-2013-ம் தேதிய தீர்மான எண்.92-ல் வங்கி நிறுவனமாக இருப்பதால் வரிசை எண்.1 மற்றும் 2-ற்கு மாதாந்திர வாடகை ரூ.6,000/- எனவும் வரிசை எண்.3-ற்கு மாதாந்திர வாடகை ரூ.20,000/- எனவும் நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றத்தின் அனுமதிக்கு ந.க.எண்.4363 /2013 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 170 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 92 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வார்டு எண்.8- கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு – பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு – டெபாசிட் தொகை மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் மூலம் வாடகை தொகையை அரசு மதிப்பீட்டின்படி நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

----

கோயம்புத்தூர் மாநகராட்சியில், மேற்கு மண்டலம், வார்டு எண்.8 கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகத்தில் மாநகராட்சி மூலம் கட்டப்பட்டு வருகின்ற மூன்று வணிக வளாக கடைகளுக்கு பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு அதற்குண்டான டெபாசிட் தொகைகள் மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யவும்,

| வ.எண். | வைப்புத்தொகை(ரூ) | காப்புத்தொகை(ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 1,00,000/- | 50,000/- | 2,00,000/- | 1,00,000/- |

| வ. எண். | வார்டு எண். | வணிக வளாக கடைகள் | கடைகளின் எண்ணிக்கை க | சதுரடி (கடை ஒன்றுக்கு) | பொதுப்பணித் துறை மதிப்பீடு (சதுரடி ஒன்றுக்கு) | அரசு நிர்ணயத்தொகை (Base Value) (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 8 | கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகம் | 1 | 16 x 16 = 256 | 41.86 | ரூ.11000 |
| 2. | 8 | கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகம் | 2 | 16 x 11= 176 x 2 = 352 | 41.86 | ரூ. 7500 |

மேற்படி கடைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள வாடகை , வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகைகளை நிர்ணயம் செய்யவும், பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 72 நாள். 23.08.2013ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தை ஏற்பது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ,ந.க.எண். 4220/ 2013 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 171 நாள் 29.08.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 72 நாள் 23.08.2013ன் ஒப்புதலை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.7.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

**பார்வை:** ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 26.12.2012,23.1.2013,13.2.2013, 28.2.2013 13.3.2013, 26.3.2013, 17.4.2013, 15.5.2013 & 12.6.2013

***

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே பல முறை ஏலம் நடைபெற்றது இவ்வினங்களை 25.7.2013-ம் தேதியன்று மீண்டும் பொது மறு மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

**10-வது ஏலம் நடைபெற்ற தேதி – 25.7.2013**
வணிகவளாக கடைகள்

| வ. எண் | குத்தகை இனங்கள் & வணிகவளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிா்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | பன்னீா் செல்வம் பூமாா்கெட் கடைகள் மாத வாடகை | | | | | |
| | B15 | 18250 | A.V.உதயகுமாா் | - | 4500 | 4500 |
| | E42 | 18250 | P.புவியரசு | - | 4500 | 4500 |

| வ. எண் | குத்தகை இனங்கள் & வணிகவளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிா்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 2 | ஆா்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கம் அருகில் முதல் தளத்தில் 6467 சதுரடி கட்டிடம் (மாதாந்திர அடிப்படையில் வாடகைக்கு) | 1,01,430 | P.B.சஜீவன்<br>K.லட்சுமி நாராயணன் | - | 93,000<br>91,000 | 93,000 |

<u>வணிகவளாகங்கள்</u>

வரிசை எண்.1 –ல் உள்ள இனத்திற்கு பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் B-15-க்கு திரு.A.V.உதயகுமாா் என்பவா் மட்டும் கலந்து கொண்டு ரூ.4500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் E-42-க்கு திரு.P.புவியரசு மட்டும் கலந்து கொண்டு ரூ.4500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு முதல் முறை 12.6.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. தற்போது நடைபெற்ற ஏலத்தில் அரசு நிா்ணயத்தொகை ரூ.1,01,430/- (Base value) விட குறைவாக ரூ.93,000/-ற்கு P.B.சஜீவன் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா்.

எனவே, மேற்படி குத்தகை இனங்களை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு வைக்கப்பட்டதில், தீா்மான எண். 74 நாள். 23.08.2013ன்படி வணிக வளாக கடைகள் வரிசை எண். 1 மற்றும் 2ன் உயா்ந்த பட்ச ஏலத்தொகையை ஏற்று ஒப்படைப்பு செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானத்தை ஏற்பது தொடா்பாக மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 172 நாள் 29.08.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 74 நாள் 23.08.2013ன் தீா்மானத்திற்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வாா்டு எண்.23 & 24- திருவேங்கடசாமி சாலை, சா்சண்முகா சாலை-இராமசந்திராசாலை சந்திப்பு மற்றும் ஆரோக்கியசாமிரோடு வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு –பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு – டெபாசிட் தொகை மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் மூலம் வாடகை தொகையை அரசு மதிப்பீட்டின்படி நிா்ணயம் செய்தல் - தொடா்பாக.

பாா்வை - துணை ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள்.15.6.2013

----

கோயம்புத்தூர் மாநகராட்சி-மேற்கு மண்டலம், வார்டு எண்.23 ஆரோக்கியசாமிரோடு (வடக்கு), ஆரோக்கியசாமிரோடு (தெற்கு) மற்றும் வார்டு எண்.24 திருவேங்கடசாமி சாலை, சர்சண்முகம் சாலை-இராமசந்திராசாலை சந்திப்பு பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு அதற்குண்டான டெபாசிட் தொகைகள் மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யவும்.

| வ.எண். | வைப்புத் தொகை(ரூ) | காப்புத் தொகை(ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 2,00,000/- | 1,00,000/- | 5,00,000/- | 2,00,000/- |

| வ. எண் . | வார்டு எண். | வணிக வளாக கடைகள் | கடைகளின் எண்ணிக்கை | சதுரடி (கடை ஒன்றுக்கு) | பொதுப்பணித் துறை மதிப்பீடு (சதுரடி ஒன்றுக்கு) | அரசு நிர்ணயத் தொகை (Base Value) (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 23 | திருவேங்கடசாமி சாலை | 11 | 10 x 21=210 | 61.86 | 13000 |
| 2. | 23 | சர்சண்முகம் சாலை-இராமசந்திராசாலை சந்திப்பு | 11 | 10 x 16=160 | 60.34 | 10000 |
| 3. | 24 | ஆரோக்கியசாமிரோடு (வடக்கு) | 40 | 10 x 16=160 | 54.10 | 9000 |
| 4. | 24 | ஆரோக்கியசாமிரோடு (தெற்கு) | 8 | 10 x 16=160 | 54.86 | 9000 |

மேற்படி கடைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள வாடகை, வைப்பு தொகை மற்றும் காப்பு தொகைகளை நிர்ணயம் செய்யவும், பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், தீர்மான எண். 73 நாள். 23.08.2013ன் படி வைப்பு தொகை ரூ.1,00,000/- எனவும் காப்புத் தொகை ரூ.50,000/- எனவும் வங்கி உறுதி சான்றிதழ் ரூ.4,00,000/- எனவும் வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ.1,00,000/- ஆக குறைத்து நிர்ணயம் செய்து பொதுமின் ஏலம் கோரலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமார்ப்பிக்கப்படுகிறது.

அலுவகலக்குறிப்பு

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தில் வைப்புத் தொகை ரூ.2,00,000/- என நிர்ணயம் செய்யப்பட்டதை ரூ.1,00,000/- ஆக குறைக்கப்பட்டுள்ளது. வாடகைதாரரால் வாடகை தொகை செலுத்தாத போது வைப்புத் தொகை குறைவாக பெறும் பட்சத்தில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் வைப்புத் தொகையை ரூ.1,50,000/-ஆக நிர்ணயம் செய்யலாம். இதர தொகையினை நிதிக்குழுவின் பரிந்துரையின்படி நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண்.5622 / 2013 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 173 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட – வருடாந்திர குத்தகை இனம் சுண்டக்காமுத்தூர் சுங்க வசூல் வருடாந்திர குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்தல் – அனுமதி வேண்டுதல் –தொடர்பாக.

பார்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத்தீர்மானம் எண்.87 நாள். 23.08.2013

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் **89** வருடாந்திரகுத்தகைஇனமானசுண்டக்காமுத்தூர் சுங்கவசூல்செய்யும் உரிமம் இனத்திற்கு **2013-2014** ஆம் ஆண்டிற்கு ஆறு முறைஏலம் விட்டும் குறைவான தொகைக்கு ஏலம் கோரப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | இனம் |
|---|---|---|
| 1. | 89 | சுண்டக்காமுத்தூர் சுங்கவசூல் |

மேற்கண்ட இனம் குறிப்பிட்ட அமைவிடம் இல்லாமல் சுங்கவசூல் இனமாக முந்தைய நகராட்சியால் ஏலம் விடப்பட்டுள்ளது. மேலும் மிகவும் குறைவான தொகைக்கு ஏலக் கோரிக்கை பெறப்படுவதால் இவ்வினத்தை 2013-2014 முதல் ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மானம் எண்.87 நாள்.23.08.2013ன்படி, வருடாந்திர குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்ய ஒப்புதல் பெற்று மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க. எண் 698/2013/பி6 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 174 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 87 நாள் 23.08.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்குமண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 77ல் சொக்கம் புதுார் ரோட்டில் அமைந்துள்ள சலவைத்துறையில் சலவை தொழில் செய்யகடை எண் 7720366(Reg)க்கு வெளிமார்க்கெட் அடிப்படையில் நிர்ணயம் செய்ததை குறைக்க கோரியது– தொடர்பாக.

பார்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத்தீர்மானம் எண். 88 நாள். 23.08.2013

*******

கோயம்புத்துார் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 77மாதாந்திர குத்தகை இனமான கடை எண் 7720366(Reg)2013-2014 ஆண்டிற்கு நிர்ணயம் செய்ய வாடகைத் தொகையை குறைக்கக் கோரியது.

| வ. எண் | வார்டு எண் | கடை எண் | தமிழ்நாடுசலவையாளர்கள்சங்கத்திற்குமாதவாடகை |
|---|---|---|---|
| 1. | 77 | 7720366(Reg) | ரூ.7500 |

வார்டு எண் 77–ல் சொக்கம்புதுார் ரோட்டில்அமைந்துள்ளசலவைத் துறையில்சலவைத் தொழில்செய்யகடை எண் 7720366(Reg) க்கு வெளிமார்க்கெட் அடிப்படையில்நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறைஅரசாணை எண் 92/03.07.2013 படியும் மாநகராட்சிதீர்மானம் எண் 172/16.08.2012ன்படி மாதவாடகை ரூ7500 ஆக உயர்வு செய்யப்பட்டதை ரத்துசெய்து பழைய முறையில் செலுத்திய கல்வரி செலுத்தஅனுமதி வேண்டிகேட்டுள்ளார். இப்பொருள்குறித்து வரிவிதிப்புமற்றும் நிதிக்குழுத் தீர்மானம் எண்.88 நாள்.23.08.2013ன்படி, மாதவாடகையாக ரூ.5000/- ஆக குறைத்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுப்பட்டுள்ளது. மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க. எண் 7852/2013/அ1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 175 நாள் 29.08.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 88 நாள் 23.08.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை, விருப்ப கேட்பு அறிக்கை பொது நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட பணிக்கு விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள விருப்ப கேட்பு அறிக்கையினை திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | விருப்ப கேட்பு அறிக்கை நாள் | பெறப்பட்ட விருப்ப கேட்பு நிறுவனத்தின் ஆலோசணை கட்டணம் சதவிகிதத்தில் | தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஆலோசணை கட்டணம் சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | 10368/12 /எம்.டி1 | வார்டு எண் 16 வடவள்ளி பகுதியில் புதிய பேருந்து திருப்பு முனையம் அமைத்தல் | 24.12.2012 (முதல் அழைப்பு) | தி/ள் எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1. 25% | தி/ள் எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1. 25% |

மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட விருப்பு கேட்பு அறிக்கைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.10368/2012/எம்.டி1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 176 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 30**

பொருள் :- மாநகராட்சிப் பகுதிகளில் - பிளாஸ்டிக் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு, சூரியஒளி மூலம் மின் சக்தி உற்பத்தி செய்ய கட்டமைப்பை ஏற்படுத்துவது மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் போன்றவைகளுக்கு பொது மக்களுக்கு ஊக்கத் தொகை, வழங்குவதற்கான செயல்முறை திட்டத்தை அமல்படுத்த மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பு.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்தல், சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் கட்டமைப்பினை குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் அமைத்து செயல்படுத்துதல், நாள்தோறும் சேகரம் செய்யப்படும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது போன்றவைகளுக்கு பொது மக்களுக்கு ஊக்கத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

1) கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பிளாஸ்டிக் பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்யாமல் தவிர்ப்பது மற்றும் பொது மக்களுக்கு பிளாஸ்டிக்கிலான டம்ளர், கேரிபேக், முலாம் பூசப்பட்ட தட்டு போன்றவற்றை விற்பனை செய்யாமல் இருக்கும் கடைகள் மற்றும் நிறுவனங்களை, தேர்ந்தெடுத்து ஊக்கத் தொகை வழங்கலாம்.
2) கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளிலும் மற்றும் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி செயல்படுத்துவோருக்கு ஊக்கத் தொகை வழங்கலாம்.
3) கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் சேமிக்கும் அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் வீட்டு உபயோகத்திற்கென பயன்படுத்தி நடைமுறையில் உள்ள மின்கட்டணம் செலுத்துவதிலிருந்து சேமிப்பு ஏற்படும் வகையில் ''சோலார் - எனர்ஜி சிஸ்டம்'' (Solar Energy System) அமைப்பை ஏற்படுத்தி செயல்படுத்துவோருக்கு ஊக்கத் தொகை வழங்கலாம்
4) மாநகராட்சிப் பகுதிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளில் பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள், மருத்துவமனைப் பொருட்களான ஊசிகள், சிரஞ்சுகள் போன்றவற்றை சாதாரணமாக சேகரம் செய்யப்படும் குப்பைகளுடன் கலக்காமல் அவற்றை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்குவோருக்கும் மற்றும் அதனை சிறந்த முறையில் செயல்படுத்தும் வார்டு பகுதிகளில் உள்ள பொது மக்களை சம்பந்தப்பட்ட வார்டு சுகாதாரஆய்வாளர் மூலம் தேர்வு செய்து உரியவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட மேம்படுத்தி செயல்படுத்தலாம்

எனவே, மேற்காணும் நடவடிக்கைகளின் மூலம் திட்டங்களை பொது மக்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி நடைமுறைப்படுத்த செயல்முறை திட்டம் ஒன்றினை உருவாக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.13664 /2006 /எம்.இ.8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 177 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 31**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கோழிக்கடைகளில் சேகரமாகம் கோழிக்கழிவுகளை தங்கள் சொந்த செலவில் எடுத்துக்கொள்வது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி எலலைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கோழிக்கடைகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகளை தங்கள் சொந்த செலவில் எடுத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ள தி/ள் வி.கே.எஸ் பார்ம்ஸ் பிரைவேட் லிமிட்டெட், திண்டுக்கல் நிறுவனத்தாருக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 6109/2013/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 178 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 32**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் பன்றிகளை பிடித்தல் - தொடர்பாக.

-------------------

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளால் பொது மக்களுக்கு இடையூறுகள், சுகாதாரசீர்கேடுகள் மற்றும் தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு உள்ளதால் ஒப்பந்ததாரர் மூலம் அப்பன்றிகளை வலை மூலம் உயிருடன் பிடித்து மாநகராட்சி எல்லைக்கு அப்பால் கொண்டு விடுவதற்கும், ஒப்பந்ததாரர் மூலம் பிடிக்கப்படும் பன்றி ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் மாநகராட்சிக்கு செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 3526/2013/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 179 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 33**

கோயம்புத்தூர் மாநகராட்சி–தெற்கு மண்டலம் -கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுப்பணித்துறைக்கு சொந்தமான குறிச்சி குளத்தை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் தூர்வாரி குளக்கரையை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டல தலைவர் தமது கடிதம் நாள் 27.08.2013ல் மேற்படி பலப்படுத்தப்பட்ட குறிச்சி குளத்தின் கரையில் நடைபாதை மற்றும் பூங்காக்கள் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநகராட்சி சார்பில் நடைபாதை மற்றும் பூங்காக்கள் ஏற்படுத்தி பராமரித்துக் கொள்ள பொதுப்பணித்துறையின் தடையின்மை சான்று கோர மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

பொதுப்பணித்துறைக்கு தடையின்மை சான்று கோர கடிதம் அனுப்ப அனுமதிக்கலாம்

ந.க.எண். 8871 /2013/ (தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 180 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 34**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு நகர்புர சாலை உள்கட்டமைப்பு நிதிப்பணிகள் (TURIF Works) சாலைப் பணிகளுக்கு 18 சிப்பங்களின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை :

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-II) அரசாணை (MS) எண்.225 நாள் 05/09/2012
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை ஆணையாளரின் செயல்முறை நடவடிக்கை நாள் 16/05/2013
3. மாமன்றத் தீர்மான எண். 60 நாள் 18/06/2013

.........................

மேற்காண் பார்வை 3–ல் கண்ட மாமன்றத் தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம் 1 முதல் 18 பணிகளுக்கு கடந்த 05/08/2013ல் உறை/மின்னனு முறைகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு:-

சிப்பம்–1 (ந.க.எண்.6701/2013/எம்.டி.3)

| வ. எண் (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.11, மணியம் வேலப்பர் வீதி, காளியப்பன் வீதி மற்றும் பெரிய சுப்பண்ணன் வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 74.70 | 1. இரத்தின வேலுசாமி – ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப் பட்டது<br>2. தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99% அதிகம் | தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99% அதிகம் | தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.95% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.11, அம்மாசை வீதிக்கு மறுதார்தளம் அமைத்தல் | 34.43 | | | |
| | மொத்தம் | 109.13 | | | |

திரு.இரத்தினவேலுசாமி அவர்கள் (Clause 4.1.A.4) தொழில்நுட்ப ஒப்புநோக்கு செய்ததில் ஒரே பணியாக செய்ததற்குண்டான நகல் இணைக்கப்படவில்லை. எனவே, தொழில்நுட்ப தகுதி பெறப்படவில்லை.

சிப்பம்–2 (ந.க.எண்.6702/2013/எம்.டி.3)

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.12, சின்னம்மாள் வீதிக்கு மறுதார்தளம் அமைத்தல் | 29.75 | 1. திரு.சி.கே. சுந்தரம் 4.94% அதிகம்<br>2. திரு.என். தங்கவேலு 5.39% அதிகம் | திரு.சி.கே. சுந்தரம் 4.94% அதிகம் | திரு.சி.கே. சுந்தரம் 4.64% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.20, அலமேலு அம்மாள் தோட்டம், பாரதியார் வீதி மற்றும் பகவத்சிங் வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 35.20 | | | |
| 3 | மேற்கு மண்டலம், வார்டு எண்.21, கோகுலம் காலனி 4வது வீதி தொடர்ச்சி மற்றும் சாஸ்திரி வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 34.80 | | | |
| | மொத்தம் | 99.75 | | | |

சிப்பம்–3 (ந.க.எண்.6703/2013/எம்.டி.3)

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.12, சபாபதி வீதிக்கு மறுதார்தளம் அமைத்தல் | 52.50 | 1. திரு.எம். துரைசாமி 4.85% அதிகம்<br>2. தி/ள் மல்லையன் பில்டர்ஸ் 7.85% அதிகம் | திரு.எம். துரைசாமி 4.85% அதிகம் | திரு.எம். துரைசாமி 4.74% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.21, முத்தண்ணன் குளம் கரை ஓரமாக உள்ள சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 47.90 | | | |
| | மொத்தம் | 100.40 | | | |

<u>சிப்பம்–4 (ந.க.எண்.6704/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.13, ஆர்.கே.நாயுடு மனைப்பிரிவு, சுப்பிரமணிய– புரம் வீதி மற்றும் ஜெகஜீவன் ராம் வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 44.00 | 1. திரு.எ. அம்மாசையப்பன் 11.39% அதிகம்<br><br>2. தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.61% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.61% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.38% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.13, நாச்சிமுத்து மனைப்பிரிவு, வி.கே.கே. மேனன் சாலை மற்றும் விஸ்வேஸ்வர ஐயர் வீதி 1 மற்றும் 3 வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 52.00 | | | |
| | மொத்தம் | 96.00 | | | |

<u>சிப்பம்–5 (ந.க.எண்.6705/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.14, அம்மாசை கோனார்வீதி, தியாகி குமரன் வீதி மற்றும் பகவத்சிங் வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 23.70 | 1. திரு.எ. அம்மாசையப்பன் 11.22% அதிகம்<br><br>2. தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.89% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.89% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்– ட்ரச்சர் 4.72% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.15, மும்மநாயக்கர் வீதி, பொன்னகர் மற்றும் கருப்பாத்தாள் மனைப்பிரிவு வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 31.00 | | | |
| 3 | மேற்கு மண்டலம், வார்டு எண்.20 லட்சுமி நகர் மற்றும் குறுக்கு வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 35.75 | | | |
| | மொத்தம் | 90.45 | | | |

<u>சிப்பம்–6 (ந.க.எண்.6706/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்.13, ராமசாமி வீதி மற்றும் பொங்காளி கோனார் வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 63.00 | 1.தி/ள் சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 8.59% அதிகம்<br><br>2. தி/ள் மல்லையன் பில்டர்ஸ் 4.72% அதிகம் | தி/ள் மல்லையன் பில்டர்ஸ் 4.72% அதிகம் | தி/ள் மல்லையன் பில்டர்ஸ் 4.67% அதிகம் |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.13, பாபா வீதி, கங்கா வீதி மற்றும் சாஸ்திரி வீதிகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 36.75 | | | |
| | மொத்தம் | 99.75 | | | |

<u>சிப்பம்–7 (ந.க.எண்.6707/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம், வார்டு எண்.70, அம்மன் குளம் வடக்கு பகுதியில் உள்ள சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 55.85 | 1.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 9.37% அதிகம்<br>2. தி/ள் வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 18.26% அதிகம் | தி/ள்எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 9.37% அதிகம் | தி/ள்எம்.எஸ் இன்ஜினியஸ் 4.99% அதிகம் |
| 2 | மத்திய மண்டலம், வார்டு எண்.70, கொண்டசாமி மனைப்பிரிவு வடக்கு, தெற்கு பிரதான சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 28.20 | | | |
| | மொத்தம் | 84.05 | | | |

<u>சிப்பம்–8 (ந.க.எண்.6708/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம், வார்டு எண்.74 ஜி.எம்.நகர் குறுக்கு சாலைகளில் மறுதார்தளம் அமைத்தல் | 70.00 | 1. திரு.எ. அம்மாசையப்பன் 5.73% அதிகம்<br>2. திருமதி.எம். சரோஜினி 4.76% அதிகம் | திருமதி.எம். சரோஜினி 4.76% அதிகம் | திருமதி.எம். சரோஜினி 4.65% அதிகம் |
| | மொத்தம் | 70.00 | | | |

<u>சிப்பம்–9 (ந.க.எண்.6709/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம், வார்டு எண்.40, ஸ்ரீராம் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 21.00 | 1. திரு.சி.கே. சுந்தரம் 4.82% அதிகம்<br>2. திரு.என். தங்கவேலு 5.26% அதிகம் | திரு.சி.கே. சுந்தரம் 4.82% அதிகம் | திரு.சி.கே. சுந்தரம் 4.65% அதிகம் |
| 2 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41, வெங்கிடசாமி நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 74.80 | | | |
| | மொத்தம் | 95.80 | | | |

<u>சிப்பம்–10 (ந.க.எண்.6710/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41, தங்கம்மாள் நகர், அசோக் நகர் மற்றும் பாலமுருகன் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 75.00 | 1. திரு.எ. அம்மாசையப்பன் 6.89% அதிகம்<br>2. தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்–ட்ரச்சர் 2.01% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்–ட்ரச்சர்2.01% அதிகம் | தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்–ட்ரச்சர்1.94% அதிகம் |
| 2 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41 எவ்.சி.ஐ.காலனி, கிருஷ்ணா நகர் மற்றும் நந்தவனத் தோட்டம் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 25.00 | | | |
| | மொத்தம் | 100.00 | | | |

<u>சிப்பம்–11 (ந.க.எண்.6711/2013/எம்.டி.3)</u>

| வ. எண் (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் (6) |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41, காந்தி மாநகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 74.80 | 1. இரத்தின வேலுசாமி 5.51% அதிகம்<br>2. தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 59.04% அதிகம் | இரத்தின வேலுசாமி 5.51% அதிகம் | இரத்தின வேலுசாமி 4.98% அதிகம் |
| | மொத்தம் | 74.80 | | | |

<u>சிப்பம்–12 (ந.க.எண்.6712/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41, அசிசி நகர் மற்றும் நேரு நகர் விரிவாக்கம் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 60.00 | 1.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 8.96% அதிகம்<br>2. தி/ள் வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 16.43% அதிகம் | தி/ள்எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 8.96% அதிகம் | தி/ள்எம்.எஸ் இன்ஜினியஸ் 4.99% அதிகம் |
| 2 | வடக்கு மண்டலம், வார்டு எண்.47, குமரன் நகர் மற்றும் புதியவர் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 55.00 | | | |
| | மொத்தம் | 115.00 | | | |

<u>சிப்பம்–13 (ந.க.எண்.6713/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம், வார்டு எண்.41, அம்பாள் நகர், கற்பக விநாயகர் நகர் மற்றும் எம்.கே.பி. காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 75.00 | 1. திரு.எ. அம்மாசையப்பன் 4.90% அதிகம்<br>2. தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ்–ட்ரச்சர் 9.53% அதிகம் | திரு.எ. அம்மாசை யப்பன் 4.90%அதிகம் | திரு.எ. அம்மாசை யப்பன் 4.84%அதிகம் |
| | மொத்தம் | 75.00 | | | |

<u>சிப்பம்–14 (ந.க.எண்.6714/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.75 சாரமேடு பிரதான சாலை மற்றும் குறுகுகு சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 75.00 | 1.திரு.ஆர். கிருஷ்ணசாமி 11.13% அதிகம்<br>2. தி/ள் அபி அசோசியட்ஸ் 5.04% அதிகம் | .தி/ள் அபி அசோசியட்ஸ் 5.04% அதிகம் | தி/ள் அபி அசோசியட்ஸ் 4.98% அதிகம் |
| 2 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.58, கபிலன் கார்டன் சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 23.00 | | | |
| | மொத்தம் | 98.00 | | | |

<u>சிப்பம்–15 (ந.க.எண்.6715/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.75 சலாமத் நகர் மற்றும் வள்ளல் நகர் சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 64.00 | 1.திரு.ஆர். கிருஷ்ணசாமி 5.19% அதிகம்<br>2. தி/ள் அபி அசோசியட்ஸ் 11.32% அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 5.19%அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.97%அதிகம் |
| 2 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.64 நாராயணா அவின்யூ சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 34.00 | | | |
| | மொத்தம் | 98.00 | | | |

<u>சிப்பம்–16 (ந.க.எண்.6716/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.66 ஸ்ரீ லட்சுமி நகர் மற்றும் பால் ஹரிஸ் நகர் சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 49.00 | 1.திரு.ஆர். தனபால் 10.21% அதிகம்<br>2. திரு.ஆர். சுந்தர்ராஜ் 11.58% அதிகம் | திரு.ஆர். தனபால் 10.21%அதிகம் | திரு.ஆர். தனபால் 4.96%அதிகம் |
| 2 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.67 அண்ணா நகர் மற்றும் ஓம்சக்தி நகர் சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 47.00 | | | |
| | மொத்தம் | 96.00 | | | |

<u>சிப்பம்–17 (ந.க.எண்.6717/2013/எம்.டி.3)</u>

| வ. எண். (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.58 தாமோதரசாமி லே அவுட், ராமசந்திரன் லே அவுட், அங்கம்மாள் லே அவுட் மற்றும் விவேகானந்தர் ந்கர் ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 52.00 | 1.தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ் 4.45% அதிகம்<br>2. தி/ள் பி.எஸ்.கே. அசோசியட்ஸ் 4.39% அதிகம் | தி/ள் பி.எஸ்.கே. அசோசியட்ஸ் 4.39% அதிகம் | தி/ள் பி.எஸ்.கே. அசோசியட்ஸ் 4.37% அதிகம் |
| 2 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.64 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு (மேற்கு) சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 28.00 | | | |
| | மொத்தம் | 80.00 | | | |

சிப்பம்–18 (ந.க.எண்.6718/2013/எம்.டி.3)

| வ. எண் (1) | வேலையின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) (3) | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (4) | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் (5) | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு (6) |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.58, சிவா நகர் பகுதியில் உள்ள தார்தளம் அமைத்தல் | 45.00 | 1. இரத்தின வேலுசாமி 7.48% அதிகம்<br>2. தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99% அதிகம் | தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99% அதிகம் | தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.96% அதிகம் |
| 2 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.64 பி.ஆர். நகர் சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் | 34.00 | | | |
| | மொத்தம் | 79.00 | | | |

அட்டவணை களம் 5–ல் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைக்க கோரியதில் அட்டவணை களம் 6–ல் உள்ளபடி விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்கள்.

மேலும், 2013–2014ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணைப்படி (Schedule of Rates 2013-2014) விலையை ஒப்புநோக்கு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், இப்பணிகளுக்கான தொகை குறித்த காலத்தில் முடிக்கப்பட வேண்டிய அரசு மானிய நிதியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்க வேண்டி உள்ளதாலும், மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மேலும், அரசாணை எண். G.O.Ms.No.227 dated 23-11-2009ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைக்கேற்ப வழங்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியில் மேற்கொண்டு இப்பணிகளுக்குண்டான பட்டியல் தொகையில் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.6701/2013/ எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 181 நாள் 29.08.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 35**

| | |
|---|---|
| பொருள்:- | கோவை மாநகராட்சி – JNNURM பிரிவு – TUFIDCO மூலம் திட்ட பணிகளுக்காக ஒதுக்கீடு வழங்கப்பட்ட மாநில அரசு வட்டியில்லாத கடன் தொகையான 20% த்தினை திரும்ப வழங்கக்கோரியது. |
| பார்வை:- | 1. TUFIDCO கடித எண். 43 TUFIDCO/JNNURM/AM(M)/2007 dt:20.07.2007 (UGSS)<br>2. TUFIDCO கடித எண். TUFIDCO/JNNURM/AM(M)/2007 SWM dt:23.03.2007<br>3. TUFIDCO கடித எண். TUFIDCO/JNNURM/AM(M)/2007 dt:23.03.2007(WS)<br>4. TUFIDCO கடித எண். 81/JNNURM/M(MU)/2009 (SWD) dt:23.09.2009<br>5. TUFIDCO/TIFS/DEMAND/QIM(P)/2013-14 dt:12.06.2013 |

******

பார்வை 1 மற்றும் 4ல் காணும் கடிதத்தின் மூலம் கோவை மாநகராட்சி JNNURM பிரிவிற்கு கீழ்காணும் விபரப்படி அதன் எதிரே குறிப்பிட்டுள்ள திட்டப்பணிகளுக்கு மாநில அரசின் 20% தொகையான வட்டியில்லா கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டது கீழ்காணுமாறு.

ரூ. இலட்சத்தில்

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை | வட்டியில்லா கடன் 20% | மானியம் 50% | மாநகராட்சி பங்குத் தொகை 30% |
|---|---|---|---|---|---|
| 1. | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 37712.88 | 7542.58 | 18856.44 | 11313.86 |
| 2 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 9651.00 | 1930.20 | 4825.50 | 2895.30 |
| 3. | குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 11374.30 | 2274.86 | 5687.15 | 3412.29 |
| 4. | மழைநீர் வடிகால் திட்டம் | 18000.00 | 3600.00 | 9000.00 | 5400.00 |
| | மொத்தம் | 76738.18 | 15347.64 | 38369.09 | 23021.45 |

பார்வை 5ல் காணும் கடிதத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட தொகை எதுவும் இம்மாநகராட்சியால் செலுத்தாததால் மேற்படி வட்டியில்லாக் கடன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் முதல் 30.06.2013 வரை கீழ்காணுமாறு தொகை செலுத்த கோரப்பட்டுள்ளது.

| கடன் எண் | அசல் | | மொத்தம் | கேட்பு | | மொத்தம் | கடன் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | | நிலுவை | நடப்பு | | |
| SWM JO607-0008 | 13787142 | 6893571 | 20680713 | 13787142 | 6893571 | 20680713 | 160864000 |
| W/S JO607-0015 | 16249000 | 8124500 | 24373500 | 16249000 | 8124500 | 24373500 | 211212474 |
| UGSS JO607-0020 | - | - | - | - | - | - | 493866200 |
| SWD JO910-0058 | - | - | - | - | - | - | 171453000 |
| | | | | 30036142 | 15018071 | 45054213 | 1037395674 |

மேற்படி மொத்த கேட்புத்தொகை 103.73 கோடியை காலாண்டு தவணையில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி JNNURM பிரிவில் நடைபெற்று வரும் திட்ட பணிகளுக்கு மத்திய அரசு பங்கு தொகை 50% மாநில அரசு பங்கு தொகை 20% மாநகராட்சி பங்கு தொகை 30% என்று தெரிவிக்கப்பட்டது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான 20% த்தினை வட்டியில்லாக் கடனாக கருதி திரும்ப செலுத்தக் கோருவது, இம்மாநகராட்சிக்கு அதிக நிதி சுமையை ஏற்படுத்தும். ஏனெனில் இத்திட்டப் பணிகளுக்காக ஏற்கனவே மாநகராட்சி பங்கு தொகையாக 30% த்தினை செலுத்திவருகிறது. அதனுடன் மாநில அரசின் தொகையான 20% த்தினையும் கடனாக செலுத்த கோருவது, இம்மாநகராட்சி நிதி நிலைமையின் அடிப்படையில் மிக அதிகமான வட்டியில்லா கடன் தொகையினை தற்சமயம் செலுத்த இயலாத நிலையில் உள்ளது.

எனவே மாநில அரசின் வட்டியில்லாக் கடன் தொகை 20% த்தினை கடனாக செலுத்த கோருவதை தவிர்த்து முழு மானியத் தொகையாகவே ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பிக்கக்கோரி அரசுக்கும் மற்றும் TUFIDCO க்கும் கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

JNNURM திட்டத்தில் ஏற்கனவே மாநகராட்சி பங்குத் தொகையாக 30% செலவிடப்பட்டு வருகின்றனது. இத்துடன் மாநில அரசின் வட்டியில்லாத கடன் தொகையினையும் மாநகராட்சி செலுத்தும் போது அதிக நிதி சுமை ஏற்படுகிறது. இந்நிலையில் மாநில அரசின் வட்டியில்லா கடன் 20% த்தினை முழு மானியமாகவே வழங்க அரசுக்கும் TUFIDCOற்கும் கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5893/13/JN1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 182 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது – ஆய்வுக்கட்டணம் செலுத்துவது – தொடர்பாக.

————————

பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வாரியம் தயாரித்து 20.03.2007–ல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆய்வுக் கட்டண தொகையாக ரூ. 125 லட்சம் என தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் கடித எண். 3810/F.Pillur-II/AE-2/Vol-III, நாள் 10.04.200–ல் கோரப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கவேண்டிய ஆய்வுக் கட்டணம் குறித்து முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் முன்னிலையில் 30.09.2008 அன்று கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு JNNURM வழிகாட்டுதல்படி ரூ. 67.00 லட்சம் மட்டுமே வழங்கவேண்டும், அதாவது மொத்த திட்ட மதிப்பீட்டில் (ரூ.11374 லட்சம்) 0.60 % தொகை வழங்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டது. மாநகராட்சி பங்காக ஏற்கனவே ரூ. 12.00 லட்சம் தொகை, ஒப்பந்த அறிக்கை, மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைக்காக செலவிடப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை மட்டும் தயாரித்து வழங்கியதற்காக செலவிடப்பட்ட சரியான செலவு விபரங்கள் அறிக்கை வேண்டி மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலமாக ந.க.எண். 977/07/(எம்.டி.மேன்)ஜே.என்5, நாள் 26.02.2010–ல் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் ரூ. 125 லட்சம் வழங்க இயலாது எனவும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்ட வரையறைகளின்படி அனுமதிக்கப்பட்ட ரூ. 67.00 லட்சத்தில் (0.6%), மாநகராட்சியின் மூலம் தொழில்நுட்ப வல்லுநர் நியமனம் செய்து ஒப்பந்த அறிக்கைகள் மதிப்பீடுகள் தயாரிக்க செலவிடப்பட்ட தொகை ரூ. 12.00 லட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ. 55.00 லட்சம் மட்டுமே வழங்க இயலும் என தெரிவிக்கப்பட்டது. இது குறித்து 13.08.2011–ல் விரிவான அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடித எண் 45784/07/JNN1, நாள் 24.08.2011–ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்திற்கான வழிகாட்டுதலில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு மாநகராட்சியிலிருந்து ரூ. 55.00 லட்சத்தினை வழங்குவதற்கு அனுமதி அளித்து ஒப்புதல் வழங்கியும், வழங்கப்படும் தொகையினை அரசிடமிருந்து திரும்ப பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது தீர்மானம் எண். 83, நாள் 10.09.2011–ல் மேற்படி ஆய்வு கட்டணத் தொகையினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்ட வரையறையின்படி வழங்கவும், வித்தியாக தொகை ஏதும் வழங்கவேண்டி இருப்பின் இருதரப்பிலுமாக கலந்தாலோசித்து முடிவு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி தொகையான ரூ. 55.00 லட்சத்தினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு கடந்த 03.05.2012–ல் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக் காசோலை எண் 705546–ன் மூலம் செலுத்தப்பட்டது. இந்நிலையில் மீதமுள்ள தொகை ரூ. 70.00 லட்சத்தினை வட்டியுடன் வழங்குமாறு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை அவர்களிடமிருந்து கடித எண் 4104/WSIS to Cbe. Corpn/DB/2013, நாள் 20.03.2013–ல் கேட்பு கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே, ரூ. 125 லட்சத்தில் மாநகராட்சி செலுத்தியது (ரூ. 55.00 லட்சம்), செலவு செய்தது (ரூ. 12.00 லட்சம்) போக மீதமுள்ள தொகை ரூ.58.00 லட்சத்தினை ((125 – 67= 58) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வட்டியில்லாமல் செலுத்தவும், அதிக தொகையினை அரசிடம் கோரவும் மாமன்றத்தில் முடிவெடுக்க மாமன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதற்கான ஆய்வுக்கட்டணக் கேட்பு தொகை ரூ. 125 லட்சத்தில், ஏற்கனவே செலுத்தியது ரூ. 55.00 லட்சம் மற்றும் மாநகராட்சி செலவு செய்த தொகை ரூ. 12.00 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ. 58.00 லட்சத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வட்டியில்லாமல் செலுத்தவும், அதிக தொகையினை அரசிடம் கோரவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண். 977/07/ (MDman)/ ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 183 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் செலுத்தப்படும் தொகையை மாநகராட்சிக்கு வழங்க அரசினரைக் கோரலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 37**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி, தார்சாலை அகலப்படுத்துதல், கான்க்ரீட் தளம் மற்றும் தடுப்புசுவர் கட்டுதல் –ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக.

.........................

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22/08/2013 பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப்–புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4184/2013/ எம்.டி.2 | வார்டு எண்.38 38வ.உ.சி நகர் சாலை முதல் ரயில்வே பாலம் வரை தார் சாலை அகலப்–படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் | 74.80 | 14/08/2013 முதல் அழைப்பு | 1.திரு.எ.அம்மாசையப்பன், கோயம்புத்தூர் 0.48% குறைவு<br>2.தி/ள் எஸ்.கே.எம்.எஸ். கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் 11.67% அதிகம் | திரு.எ. அம்மாசையப்பன், கோயம்புத்தூர் 0.48% குறைவு |
| 2 | 6413/2013/ எம்.டி.2 | வார்டு எண்.38ல் உள்ள ரயில்வே தரைப்பாலத்தின் கீழ் கான்க்ரீட் தளம் மற்றும் தடுப்புசுவர் கட்டுதல் | 73.20 | 14/08/2013 முதல் அழைப்பு | 1.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 0.05% குறைவு<br>2.தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ், கோயம்புத்தூர் 1.11% அதிகம் | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 0.05% குறைவு |
| 3 | 4183/2013/ எம்.டி.2 | வார்டு எண்.38ல் உள்ள செங்காளியப்பன் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளை ரயில்வே தரைப்பாலம் வரை பலப்படுத்திஅகலப்–படுத்துதல் பணி | 57.80 | 14/08/2013 முதல் அழைப்பு | 1.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 0.02% குறைவு<br>2.தி/ள் விஷ்ணு இன்ப்ராஸ், கோயம்புத்தூர் 2.37% அதிகம் | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 0.02% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திறகு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - வரிசை எண் 1, 2 மற்றும் 3ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைந்த சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4184/2012/ எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 184 நாள் 29.08.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - பழைய மாநகராட்சி பகுதி 60வார்டுகளில் உள்ள பூங்காக்களை ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு செய்யும் பணியானது வரும் 31.10.2013 உடன் முடிவடைய உள்ளதால் மேற்படி பூங்காக்களுடன் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள வார்டு பகுதியில் உள்ள பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு பராமரிக்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **பூங்காக்களின் எண்ணிக்கை** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரித்தல் | 30 | 51.00 |
| 2. | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்கள் போக்குவரத்து திடல் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் பராமரித்தல் | 30 | 32.60 |
| 3. | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்கள் போக்குவரத்து திடல் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் பராமரித்தல் | 12 | 37.30 |
| 4. | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரித்தல் | 26 | 20.50 |
| 5. | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரித்தல் | 21 | 22.80 |
| 6. | மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் உள்ள பூங்காக்களை பராமரித்தல் | 21 | 41.80 |
| 7. | மத்திய மண்டலத்திற்குட்பட்ட ரேஸ்கோர்ஸ் பகுதி , அருகில் உள்ள பூங்காக்கள், போக்குவரத்து திடல் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் பராமரித்தல் | 8 | 38.80 |
| 8. | மத்திய மண்டலத்திற்குட்பட்ட வ.ஊ.சி.பூங்கா, மூத்தகுடிமக்கள் பூங்கா, அவிநாசி சாலை பூங்கா, போக்குவரத்து திடல் மற்றும் சாலையோரப்பூங்காக்கள் பராமரித்தல் | 7 | 37.40 |
| **மொத்தம்** | | **155** | **282.20** |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 09701/2013/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 185 நாள் 29.08.2013

பூங்காக்கள் பராமரிப்பு செய்வது தொடர்பாக மாமன்ற உறுப்பினர்கள் சொல்லும் ஆலோசனைகளையும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி